# வெளியுறவு செயலாளரின் ஊடக விளக்கம் (பிப்ரவரி 26,2014)

பிப்ரவரி 26,2014

**அதிகாரப்பூர்வ பேச்சாளர் (திரு சையத் அக்பருத்தின்)**: மதிய வணக்கம் நண்பர்களே.வரவிருக்கும் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு எனும் பிம்ஸ்டெக் உச்சி மாநாடு குறித்து வெளியுறவு செயலாளர் கல்ந்து கொள்ளும் இந்த கூட்டத்தில் வருகை தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி.என்னுடன் இங்கு வெளியுறவு செயலாளர் இருக்கிறார்.அவருக்கு வலதில் இணை செயலாளர் (தெற்கு) மற்றும் பிம்ஸ்டெக்கை கையாளும் திரு.சஞ்சய் பட்டாச்சார்யா அவர்கள் உள்ளார்.

எப்பொழுதும் போல் தனது ஆரம்ப கருத்துக்களை கூற வெளியுறவு செயலாளரை அழைக்கிறேன்,அதை தொடர்ந்து இன்றைய நாளின் தலைப்பாகிய பிம்ஸ்டெக் தொடர்பான கேள்விகளுக்கு அவர் பதில் அளிப்பார்.முடிவில்,நேரம் இருக்குமாயின் அவர் வேறு விஷயம் சார்ந்த கேள்விகளுக்கும் பதில் அளிப்பார்.இவை தெளிவாக இருப்பதாயின் நாம் தொடங்கலாம். தனது ஆரம்ப கருத்துக்களை கூற வெளியுறவு செயலாளரை அழைக்கிறேன்.

**வெளியுறவு செயலாளர் (திருமதி சுஜாதா சிங்)** :நன்றி , அக்பர். மதிய வணக்கம் நண்பர்களே.நீங்கள் அறிந்தது போல் பிரதமமந்திரி மார்ச் 4,2014 நே பி தவில் நடக்கவிருக்கும் பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள இருக்கிறார்.பதிநான்காவது அமைச்சர்கள் கூட்டம் மற்றும் பதினாராவது மூத்தஅதிகாரிகளின் கூட்டம் மார்ச் 1 முதல் மார்ச் 3 வரை நடக்க உள்ளது.வெளியுறவு அமைச்சர் மந்திரிகள் கூட்டத்திலும் நான் அதிகாரிகள் கூட்டத்திலும்

கலந்து கொள்ள உள்ளோம்.இந்த மாநாடு பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் இணைப்பின் வேகத்தை ஊக்குவிக்கும் மற்றும் மற்ற தலைவர்களுக்குள் இருதரப்பு கூட்டம் நடக்க வாய்ப்பு ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1997 உருவான இந்தியா,இலங்கை,வங்காளம்,தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பு குழுவிலிருந்து வங்காளத்தின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு முனைப்பு வெளிப்பட்டது.1997 இல் மியான்மார் சேர்ந்தது.2004 இல் பாங்காக்கில் நடந்த முதல் மாநாட்டில் நேபாளம் மற்றும் பூடான் சேர்ந்தன.2008 இல் இரண்டாவது மாநாட்டை இந்தியா கூட்டியது.மியன்மாரை தொடர்ந்து நேபாளம் இதை நடத்தும்.இது அகவரிசையில் செல்கிறது.

1990 இந்தியாவின் கிழக்கு நோக்கி பார்க்கும் மற்றும் தாய்லாந்தின் மேற்கு நோக்கி பார்க்கும் கொள்கையின் வெளிப்பாடே பிம்ஸ்டெக் ஆகும்.இந்த ஏழு உறுப்பினர்களும் உலகின் மொத்த மக்கள் தொகையில் 20 சதவீதம் அதாவது 1.5 பில்லியன் மக்களை ஒன்றிணைக்கிறார்கள் மற்றும் 2.5 டிரில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேலாக உள்நாட்டு உற்பத்தி செய்கிறார்கள்.

தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியா ,சார்க் மற்றும் ஆசியான் நாடுகளுக்கிடையிலான ஒரு இணைப்பை பிம்ஸ்டெக் வழங்குகிறது.வங்காளத்தில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் இந்தியாவின் வட கிழக்கு பகுதியை மையத்திற்கு கொண்டு வருவது மற்றும் இணைப்பை வலுப்படுத்தவும் முற்படுகிறது.துறைகள் சார்ந்த ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக ஒப்பந்தங்கள் மற்றும் நிறுவனங்களின் ஒரு கட்டமைப்பு அமைக்க இது முயற்சிக்கிறது.

பிம்ஸ்டெக் கடந்த ஆண்டுகளில் படிபடியாக முன்னேற்றம் கண்டு மேலும் செயலூக்கமான ஒரு கட்டத்திற்கு தயாராக

உள்ளது.பிம்ஸ்டெக் நிகழ்ச்சி மற்றும் நடவடிக்கைகள் குறித்து தனியாக ஒரு பின்னணி குறிப்பு பின்னர் தரப்படும்.

இந்தியா தாய்லாந்துடன் இணைந்து பிம்ஸ்டெக்கில் முன்னோடியாக இருந்து முக்கிய பங்கை வகிக்கிறது.பிம்ஸ்டெக் முன்னனி நாடுகளுடன் 14 முன்னுரிமை பகுதிகள் கொண்டுள்ளது: 1) போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு ,2) சுற்றுலா,3) சூழல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் , மற்றும் 4) எதிர்ப்பு மற்றும் நாடுகடந்த குற்றம்.இந்தியா தலைமையில் நான்கு முன்னுரிமை பகுதிகளில் உறுதியான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்தில்,புறநிலை பொருளாதார தாழ்வாரங்களை ஊக்குவிக்க பிராந்திய இணைப்பை முக்கியபடுத்தியுள்ளது.இந்த பகுதியில் பல திட்டங்கள் இந்த வழியின் கீழ் உள்ளன.டிசம்பர் 2013 ளில் பிம்ஸ்டெக் போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் தளவாடங்கள் ஆய்வு முடிந்தது.புதுடில்லியில் ஆசிய முன்னேற்ற வங்கி (ஏடிபி) உதவியுடன் பிராந்திய இணைப்பிற்காக செயல்படுத்த வேண்டிய திட்டங்களின் குறுகிய பட்டியல் இந்த ஆண்டின் மத்தியில் முடிவு செய்யப்படும்.புகையிரதம்,சாலைகள்,கடல் மற்றும் பல்வகை போக்குவரத்து குறித்த உரையாடல்கள் வளர்ந்துள்ளன.

தொழில் சார்ந்தவர்களின் பரிமாற்றம் மற்றும் பயிற்சி தவிர சுற்றுலாவில்,ஒரு பிம்ஸ்டெக் தகவல் மையம் டில்லியில் நிறுவப்பட்டுள்ளது.அணைத்து பிம்ஸ்டெக் நாடுகளிலும் இது பெரும் திறனுள்ள ஒரு பகுதியாகும்.பல சமூகநல பிராந்திய சுற்றுலா திறனை வளர்த்து இணைப்பு மற்றும் மக்களுள் தொடர்பை வளர்க முயற்சி நடந்துள்ளது.சுற்றுசூழல் மற்றும் அனார்த்த முகாமைத்துவத்தில் நொய்டாவில் புவி அறிவியல் அமைச்சகம் காலநிலை மற்றும் வானநிலை குறித்து ஒரு பிம்ஸ்டெக் மையத்தை உருவாக்க இருக்கிறது.ஒரு மேன்மையான தொடக்கம் விரைவில் நடக்க

உள்ளது.தகவல் பங்கீடிற்கு எங்கள் சுனாமி எச்சரிக்கை மையம் உள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்க்க குற்றவியல் விஷயத்தில் பரஸ்பர சட்ட உதவி செய்யும் பிம்ஸ்டெக் மாநாட்டை பேச்சுவார்தை மூலம் இந்தியா உறுதியாக்கி உள்ளது. சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு, நாடுகடந்த அமைப்புடைய குற்றம் மற்றும் சட்டவிரோத போதை மருந்து கடத்தல் தொடர்பான உடன்படிக்கை 2009 இல் கையெழுத்திடப்பட்டது.

ஒத்துழைப்பை மேம்படுத்த நான்கு துணை குழுக்கள் நிறுவப்பட்டதை தொடர்ந்து உளவுபகிர்தலில் முன்னணி மேய்ப்பவர்களாக இலங்கையும்,பயங்கரவாத நிதியை எதிர்பதில் முன்னணி மேய்ப்பவர்களாக தாய்லாந்தும்,சட்ட மற்றும் சட்ட அமலாக்க எதிர்ப்பில் நாமும்,போதை மருந்து கள்ள கடத்தல் தடுப்பில் முன்னணியில் மியன்மாரும் உள்ளன.

பல துறைகளில் மற்ற உறுப்பினர்கள் எடுக்கும் முயர்ச்சிக்கும் ஆதரவு தருகிறோம்.எரிசக்தியில்,பெங்களூரில் மின்சார அமைச்சகம் பிம்ஸ்டெக் எரிசக்தி மையத்தை நிருவியுள்ளது.பிராந்திய எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் கட்டங்கள் வளர்ச்சி பரஸ்பரம் நன்மை பயக்கும்.

சுகாதார துறையில் ,ஆயுர்வேத பயிர்ச்சிக்காக **30 ஆயுஷ்** கல்வி உதவி தொகை வழங்குகிறோம்.பிம்ஸ்டெக் பங்காளிகளுக்காக பாரம்பரிய மருத்துவ பிணையத்தை உருவாக்கியுள்ளோம். குறித்து பெருகி வரும் தேவை கொண்ட பொதுவான மருந்துகள் குறித்து நெருக்கமான ஈடுபாடு கொண்டுள்ளோம்.

விவசாயத்தில்,உயிர்தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பு,விதைகள் மற்றும் எல்லை தாண்டும் நோய்கள் கட்டுப்பாடு மற்றும் விவசாய நிறுவனங்கள் இணைப்பு ஆகியவற்றிர்க்கு ஆதரவு தருகிறோம்.வர்த்தகம் மற்றும் முதலீட்டில், பிம்ஸ்டெக் வர்த்தக

ஒப்பந்தம் குறித்த விவாதங்கள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.சுங்கத்துறை ஒத்துழைப்பு மற்றும் சர்ச்சை தீர்மானம் குறித்து இறுதியாக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின ,பி2பி எனப்படும் வர்த்தகத்திலிருந்து வர்த்தகம் இணைப்புகள் வளர்ந்துள்ளன.

மக்கள் முதல் மக்கள் தொடர்பில் சுமார் 1200 இந்தியா தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு திட்டம் (ஐ டி ஈ சி )கல்வி உதவி தொகை பயன்படுத்தபட்டுள்ளன.ஆராய்ச்சி தகவல் அமைப்பு முதன்மை நிறுவனமாக பிம்ஸ்டெக் சிந்தனை குழுவின் வலை அமைப்பை ஏற்பாடு செய்தது.

பொருளாதார ஒத்துழைப்பின் மீது வட கிழக்கு சில்லாங்கில் 2013 இல் நடைபெற்ற கோல்கத்தாவின் வருடாந்திர ஒருங்கிணைந்த பிம்ஸ்டெக் கருத்தரங்கு மற்றும் 2014 இல் இம்பாலில் நடந்த கருத்தரங்கிற்கும் ஆதரவு தந்துள்ளோம்.இது பரந்த பங்களிப்புக்கும் வட கிழக்கில் உள்ள ஆற்றலை வெளிப்படுத்தவும் வழிவகுத்தது.

வங்காள டாக்கா நகரில் நிறுவப்படவுள்ள நிரந்தர செயலகத்திற்கு உண்டான ஆண்டு செலவில் 32 சதவீதத்தை இந்தியா தான் பங்களிப்பாக்க உறுதி அளித்துள்ளது.இது தவிர பிம்ஸ்டெக் எரிசக்தி மையம்,வானிலை மற்றும் காலநிலை மையம்,தகவல் மையம் வழங்க உள்ளோம்.பிம்ஸ்டெகில் நம்முடைய பங்குகள் குறிபிடத்தக்கவை மேலும் அவை முடிர்ச்சியடைந்து தொகுப்பாக வளரும்.

பிம்ஸ்டெக் பொருளாதார ஒத்துழைப்பு,எரிசக்தி மற்றும் இணைப்பு ஒத்துழைப்பு ,கலாச்சார ஒத்துழைப்பு ,ஆகியவற்றை ஊக்குவித்து பாதுகாப்பு தொடர்புகளை வலுப்படுத்தும் என நம்புகிறோம். பிம்ஸ்டெக் நீங்கள் காண்பதுபோல் பல முனைகளில் பெரும் ஆற்றல் கொண்டுள்ளது.செயல்முறைகளை ஒருங்கிணைப்பதற்க்கும்

முன்னுரிமை பகுதிகளில் இலக்கு சார்ந்த திட்டங்களில் கவனம் செலுத்தவும் நாம் நம் தலைமைத்துவம் மற்றும் உறுதிப்பாட்டை வழங்கவும் முன்னுரிமை அளித்துள்ளோம்.

மூன்றாவது மாநாடு ஒரு ஒருங்கிணைந்த முறையில் நடவடிக்கைகளை முடக்கிவிட முன்மொழிகிறது.இதன் முக்கிய விளைவு டாக்காவில் நிரந்தர செயலகம் அமைப்பது ஆகும்.பிம்ஸ்டெக் வானிலை மற்றும் காலநிலை மையம் இந்தியாவில் அமைப்பது மற்றும் கலாசார தொழில்கள் புட்டானில் அவதானமாக கொண்டு ஒப்பந்த குறிப்புகள் கையெழுத்தாவதும் இதன் விளைவாகும்.

மியான்மார் அதன் அபிலாஷைகளை எதிரொலிக்கும் வண்ணமாகவும் இந்த முனைகளில் கண்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்கும் வண்ணமாகவும் இணக்கம் மற்றும் செழிப்பு என்பதை தங்கள் கருப்பொருளாக முன்மொழிந்துள்ளனர்.நன்றி.

**அதிகாரபூர்வ பேச்சாளர்**: உங்க கேள்விகளுக்காக இந்த மேடை இப்பொழுது திறந்துள்ளது.

**கேள்வி**: நீங்கள் போக்குவரத்திற்காக ஏழு திட்டங்கள் பற்றி பேசினீர்கள்.அதை பற்றிய விவரங்கள் மற்றும் கலாடன் பன்முறை கடல் திட்டம் பற்றியும் கூற முடியுமா?

**வெளியுறவு செயலாளர்**; நான் இணை செயலாளர் திரு சஞ்சய் பாட்டாசார்யா அவர்களை விவரங்கள் அளிக்க அழைக்கிறேன்.

**இணை செயலாளர் (தெற்கு)** (திரு சஞ்சய் பாட்டாசார்யா) : போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் லாஜிஸ்டிக்ஸ் ஆய்வு (பிடிஐஎல்எஸ்) தயாரிப்பி ஆசிய முன்னேற்ற வங்கியுடன்(ஏடிபி) சேர்ந்து பணி செய்துள்ளோம்.இப்பகுதிக்குள் இணைப்பை ஊக்குவிக்கும் சுமார் 100 திட்டங்களை பிடிஐஎல்எஸ் ஆய்வு உண்மையாக

கண்டுள்ளது.மார்ச்,ஏப்ரல்,மற்றும் ஜூனில் மூன்று கூட்டங்கள் நடத்த திட்டமிட்டுள்ளோம்.இதில் கடைசி மூன்றாவது டில்லியில் நடக்கும்.இந்த நாடுகள் ஒவ்வொருவராலும் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை கொண்ட திட்டங்களின் இறுதிபட்டியலை இதுபோது அடையாளம் காணலாம்.பிறகு இத்திட்டங்களை ஏடிபி செயலூகாத்திறன் எடுத்துக்கொள்ளும்.

நிச்சயமாக பிம்ஸ்டெக்கு உள் இணைப்பை ஊக்குவிக்கும் பல திட்டங்கள் உள்ளன.நீங்கள் குறிப்பிட்ட கலாடன் இதன் கீழ் செயல்படும் ஒன்று.2016 இல் இது முடிவடையும் என்று எதிர்பார்க்கிறோம்.இந்தியாவின் வடகிழக்கை மியான்மார் வழியாக தாய்லாண்டுடன் இணைக்கும் முத்தரப்பு நெடுஞ்ச்சாலையும் அந்த நேரத்தில் முடிவடையும் என நினைக்கிறோம்.இந்த பகுதியில் நாங்கள் வேறு திட்டங்களும் வைத்துள்ளோம்.எனவே, இந்த கட்டத்தில் பிடிஐஎல்எஸ் ஆய்வு அடிப்படையயின் மேல் பிம்ஸ்டெக்கின் முன்முயற்சி உள்ளது.

**கேள்வி**: மேடம் வெளியுறவு செயலாளர்,நீங்கள் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (எ.்ப்டிஏ) பேச்சுவார்த்தைகள் குறித்து விவரிக்க முடியுமா?இந்த ஒப்பந்தம் குறித்த முடிவை இந்த மாநாட்டில் எதிர்பார்க்க முடியுமா?

**வெளியுறவு செயலாளர்**: நீங்கள் அறிந்ததுபோல் எ.்ப்டிஏ) பேச்சுவார்த்தை செயல்முறைகள் அதிக நேரம் எடுப்பவை ஆகும்.பிம்ஸ்டெக் பேச்சுவார்த்தை மிகவும் சிக்கலானது ஏனெனில் தெற்காசிய வர்த்தக சுதந்திர பகுதி எனப்படும் (எஸ்ஏஎ.்ப்டிஆ) செயல்முறை கீழ் நமக்கு ஒரு எ.்ப்டிஏ உள்ள நாடுகளை அது உள்ளடக்கியுள்ளது தவிர தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கம் எனும் (ஆசிஈஏன்) சேர்ந்த நாடுகளும் உள்ளன.இவை யாவையும் கணக்கில்

கொண்டு இந்தியா மற்றும் அவர்களுக்கும் ஏற்ற ஒரு விளைவுக்கு வரவேண்டும்.எனவே,இது சிறிது காலம் எடுக்கும்.

**கேள்வி**: மியான்மாருக்கு பிரதமரின் கடைசி பயணம்,என்ன உறுதி செய்யப்பட்டது, என்ன விடுபட்டது,என்ன செய்யப்படவேண்டும், குறிப்பாக வட கிழக்கில் மனதில் கொண்டு ஆகியவை குறித்து ஆய்வு செய்ய ஒரு வாய்ப்பு இருக்குமா?பேருந்து சேவை உட்பட நிறைய வாக்களிக்கப்பட்டது....

**வெளியுறவு செயலாளர்**: நிச்சயமாக.2012 இல் இருதரப்பு விஜயத்திற்கு பிறகு இரண்டு ஆண்டுகள் பின்னர் மியன்மாருக்கு வருகை தரும் பிரதம்ர் என்ற உண்மையின் மத்தியில் ,நாம் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய பயிற்சி செய்துள்ளோம். இந்த அளவுக்கு திருப்திகரமாக உள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.செயலில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்ற பல திட்டங்கள் உள்ளன.தொழில் நுட்ப பூங்கா, வளர்ச்சி தாழ்வாரங்கள், இணைப்புக்கள், சாலைகள், தொடர்புகள், நாடுகளுக்கிடையே உள்ள எல்லை தொடர்புகள் ஆகியவை உள்ளன.

சில திட்டங்கள் மற்றதை விட அதிக நேரம் எடுத்துள்ளது ஏனெனில் புவியியல் நிலப்பரப்பில் எதிர்கொண்ட பிரச்சினைகளின் காரணமாக.எனினும் இந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் பயணத்தை தொடர்ந்து மியன்மாருக்கு கொடுத்த வாக்குறுதிகளில் திருப்திகரமாக முன்னேறி வருகிறது என்று கூறுவேன்.

**கேள்வி**: தாய்லாந்தின் சினவத்ரா அங்கு வரவில்லையெனில் உச்சி மாநாட்டு நிலையில் மாற்றம் இருக்குமா?

**வெளியுறவு செயலாளர்**: அப்படி ஏன் ஆகவேண்டும் என்பதற்கான எந்த காரணமும் எங்களுக்கு தெரியவில்லை.இது தலைவர்களுக்கான மாநாடு ஆகும்,அதில் தாய்லாந்து பிரதமர் சில உள்நாட்டு

காரணங்களினால் வர இயலாவிடில்,மற்ற உறுப்பினர்கள் அதை நன்றாக புரிந்து கொள்ள காட்டல் வேண்டும்.

**கேள்வி**: மேடம்,சுற்றுலா ஒரு சாத்தியமான பகுதி என்று நீங்கள் கூறியதற்க்கு என்ன பொருள்?அங்கு செல்ல விருப்பப்படுபவர்களுக்கு ஆவணம் தாராளவாதம் ஆக்கப்படுமா?

**வெளியுறவு செயலாளர்**:ஆட்டதையே மற்றும் போக்குள்ள ஒரு துறையாக நாம் சுற்றுலாவை கருதலாம்,ஏனெனில் அது உள்ளே கொண்டுவரும் முதலீடு மற்றும் அது ஏற்படுத்தும் வேலைவாய்ப்புகள் ஆகும். ஏற்கனவே,நீங்கள் விரும்பினால்,மருத்துவ சுற்றுலா உட்பட எல்லையில் மியன்மாருடன் இயக்கம் எல்லை கடப்பதில் ஒரு நல்ல ஒப்பந்தம் உள்ளது என்பதை கூறிக்கொள்கிறேன்..

உதாரணமாக மணிப்பூரில் சிறந்த மருத்துவ வசதிகள் உள்ளன.கலை அரசு குவஹாதியில் உலகத்தர கண் மருத்துவமனை உள்ளது.தென் கிழக்கு ஆசியாவிலிருந்து இந்த சேவைகளை பயன்படுத்தி கொள்ள மக்கள் வருகிறார்கள்.ஆதலால் மருத்துவ சுற்றுலா ஒரு பகுதியாக உள்ளது.மற்ற சுற்றுலா நடவடிக்கைகளை பார்க்கையில், மணிப்பூர் இம்பாலில் சர்வதேச விமான நிலையத்தில் மியான்மார் மற்றும் சகாயிங்க் முதலமைச்சர்கள் தலைமையில், மணிப்பூர் முதலமைச்சர் பெற,முதல் தடவையாக சர்வதேச விமானம் தரை இறங்கியது.அவர்கள் குவஹாதிக்கு விஜயம் செய்தார்கள்.அந்த பகுதிகள் சென்ற பின்னர் மகாபோதிக்கு சென்றனர்.

விமானம் மூலமோ,கடல் மூலமோ,அல்லது நிலம் மூலமோ எளிதாக குறைந்த கட்டுப்பாட்டு முறையில் மக்கள் கடந்து செல்ல அனுமதிப்பது இந்த தொடர்புகளை சரியான இடத்தில் வைத்து நிர்வாகித்தால் சாத்தியம் ஆகுமென்பதை நீங்கள் கற்பனை செய்யலாம்.

நீங்க்ல் குறிப்பாக விசா ஆவணம் பற்றி கேட்டீர்கள்.எங்களின் சொந்த அக்கறைகளையும் கருத்தில் கொண்டு,சிரமம் அதிகமில்லாமல் மக்கள் எல்லை தாண்டும் வகையாக அதையும் எளிதாக பெற சாத்தியமான வழியை பார்க்க உள்ளோம்.

**கேள்வி**: இந்த பயணத்தின் போது பிரதமார் வலியுறுத்தவிருக்கும் சில உந்துதல் பகுதிகள் பற்றி பட்டியலிட முடியுமா?

**வெளியுறவு செயலாளர்**: இந்தியா முன்னணி நாடாக உள்ள போக்குவரத்து, சுற்றுலா, சுற்றுச்சூழல் மற்றும் பேரழிவு மேலாண்மை, மற்றும் பயங்கரவாதம் ஆகியவை உந்துதல் பகுதிகள் என நான் மிகவும் விரிவான சுருக்க உரை கொடுத்துள்ளேன்.நாங்கள் பிம்ஸ்டெக் பற்றி பேசுகையில் நீங்கள் அது சார்க் மற்றும் ஆசிஈஏஎன் ஆகியவையை இணைப்பது பற்றி பேசும்போது, நான் வட கிழக்கு என்ற குறிப்பாக காட்டியிருந்த உந்துதல் பகுதியை பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பிம்ஸ்டெகின் ஆற்றலை நீங்கள் குறைவாக மதிப்பிட முடியாது.குறுக்கு இணைப்பு தொடர்புகளின் பலன்களை அங்கிருக்கும் நம் மாநிலங்களுக்கு கொண்டு சேர்த்தது பிம்ஸ்டெக் ஆகும்.வடகிழக்கில் இணைப்பு ஒரு பெரும் பிரச்சினை ஆகும்.அது கிழக்கு நோக்கி பார்க்கும் கொள்கையோ அல்லது பிம்ஸ்டெக்கோ,நமது கவனம் எல்லாம் நாம் செய்வது இணைப்பு, போக்குவரத்து, வர்த்தகம், சுற்றுலா ஆகியவற்றை எல்லா வடகிழக்கு மாநிலங்களும் பெறவேண்டும் என்பதே ஆகும்.நமது பிரதமர் இந்த பகுதிகள் வளர்ச்சி குறித்து சிறப்பு அக்கறை கொண்டுள்ளார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கடந்த ஆண்டு இதை கவனத்தில் கொண்டு திட்டக்குழு ஒரு கூட்டம் நடத்தியது.திட்டக்குழு வட கிழக்கை இலக்காக வைத்து அதை எப்படி மேலும் வளர்க்க முடியும் என்று கண்டனர்.மூன்று வாரங்களுக்கு முன்

நான் குவஹாதிக்கு சென்றபோது எரிசக்தி ,சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை, சுற்றுலா உள்ளிட்ட தொலைத்தொடர்பு, உள்நாட்டு விமான போக்குவரத்து,உள்கட்டமைப்பு பிரச்சினைகளை சமாளிக்கும் அணைத்து முக்கிய அமைச்சரவை செயலாளர்களுடன் சென்றேன். வடகிழக்கு பகுதிகளை வளர்க்கும் வண்ணமாக நாம் ஒன்றாக எவ்வாறு வேலை செய்யமுடியும் என துல்லியமாக ஆராய்ந்தோம்.

மியன்மாரில் சமீபத்திய முன்னேற்றங்களினால் முழுப்பகுதியும் விரிந்து வெளிநாட்டு முதலீடுகளுக்கு திறப்பு தந்து எல்லையில் பல மாற்றங்கள் நடைபெறுகின்றன.இந்நிலையில் நம் வடகிழக்கு பகுதி பின் தங்காமலிருக்கவும்,அதன் திறனுக்கு ஈடான முறையில் அது வளரவும்,சாலைகள் மற்றும் யாவும் நன்கு இணைக்கப்பட்டு நாமும் வேகமாக இல்லையெனினும் இணையாக திறனை பயன்படுத்துவதை உறுதி செய்வது நமது நலனுக்கே ஆகும்.

இதில்,சார்க் நாடுகளான வங்காளம், பூட்டான், நேபால் ஆகியவற்றுடன் நாம் கொண்டுள்ள உறவும் முக்கியமானவை.ஆதலால்,அந்த முழுப்பகுதியும் கவனிக்க வேண்டியவை.நீங்கள் அறிந்ததுபோல்,அடுத்தடுத்து இரண்டாவது முறையாக வடகிழக்கு மாநிலங்கள் 10 சதவீதம் விதத்தில் வளர்ந்துள்ளது,இது மற்ற இந்தியா பொருளாதாரத்டைவிட அதிகமாகும்.ஆக,இது உண்மையில் பெரும் வளர்ச்சி மற்றும் வரும் மாதங்களில் அதிக வளர்ச்சி பெரும் சாத்தியமாகிறது.அந்த முன்னோக்கில் நீங்கள் அதை கடைபிடிக்க நான் பார்க்கிறேன்.

**கேள்வி**: நாம் எல்லை வர்த்தக புள்ளிகள் திறக்க ஒப்புக்கொண்டுள்ளோம்.இரண்டு வருடத்திற்கு பிறகும் நம் பக்கமுள்ள எல்லை வர்த்தக புள்ளிகள் வளரவில்லை.நாகாலாண்டில் உள்ள லோங்க்வாவை பார்த்தால் இன்னமும் ஓலைகூரையை

காண்பீர்கள்.சர்வதேச வர்த்தக மையம் என்று அவர்கள் கூறும் இடத்திற்கு ஒரு அணுகுசாலை கூட இல்லை.ஆனால் நாம் மியான்மார் வளர உதவுகிறோம்.நம் மக்கள் பயன்பட நமது பக்கத்தை வளர்க்க வேண்டும் என நான் நினைக்கிறேன்.

**வெளியுறவு செயலாளர்:** நான் முற்றிலும் உடன்படுகிறேன். ஆனால் அங்கு நான் உங்கள் அறிக்கையாகிய நம் பக்கத்தில் வளர்ச்சி இல்லை என்பதை போட்டியிட வேண்டும் என்று நினைக்கிறேன்.நாம் வளருகிறோம்.சாலை கட்டபடுகின்றன.முன்னேற்றம் வேகமாக இருக்க முடியும் ஆனால்...( **சரியாக கேட்கவில்லை**)...ஒருங்கிணைந்த சோதனை சாவடிகள் உள்ளன ,தரையில் திட்ட வடிவமும் உள்ளன, இதற்கான கட்டுமான பணிகள் துல்லியமாக நடக்கின்றன.புகையிரத இணைப்பும் வந்து கொண்டிருக்கிறது.எனவே,இது நடக்கிறது.இது மெதுவாக நடந்தாலும் நிச்சயமாக நடக்கிறது.

**கேள்வி:** மியன்மாரில் இலங்கை ஜனாதிபதியை பிரதமர் சந்திக்க இருக்கிறாரா என்று எனக்கு தெரிய வேண்டும்?ஈலம் போர் நான்கில் 2009 இல் நடந்த போர் குற்றங்களை குறித்து ஒரு சர்வதேச விசாரணைக்கு எண்ணம் அளித்த நவநீதம் பிள்ளையின் கருத்தை இலங்கை நிராகரித்துவிட்ட போதில் ,நாம் ஜெனீவாவில் எப்படி வாக்களிக்க போகிறோம்?

**வெளியுறவு செயலாளர்:** உங்கள் முதல் பகுதி கேள்விக்கு பதில் ஆம், இருக்கிறது. பிரதமர் இலங்கை ஜனாதிபதியை சந்திக்க உள்ளார். இரண்டாவது, நாம் ஜெனீவாவில் வாக்களிக்க போகிராம்.எப்படி என்பது பற்றி உண்மையில் வாக்கு நடைபெறும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கிறேன்.இது ஒரு மிகவும் சிக்கலான செயல்முறை என்று உங்களுக்கு தெரியும். நாம் தீர்மானம் உரை பார்க்க வேண்டும், கணக்கில் பல்வேறு பிற காரணிகளையும் எடுக்க வேண்டும், பிறகு நாம் இறுதியாக வாக்களிக்க வேண்டும்.அது குறித்து

முடிவு வரும் வரை உங்களின் இந்த கேள்விக்கு நான் பதிலளிக்க துணியவில்லை.

**கேள்வி:** மேடம் வெளியுறவு செயலாளர்,அணுசக்தி ஒத்துழைப்பு பகுதியில் தற்போதைய இந்தியா - ரஷிய பேச்சுவார்த்தைகள் பற்றி மேம்படுத்தி கூற முடியுமா,குறிப்பாக ரோசாடோம் தலைவர் இரு நாட்களுக்கு முன் இங்கே இருந்ததும் ரோகோஜின் இந்தியா இடைத்தரகர்களை இன்று சந்திப்பது தொடர்பாகவும் விவரிக்க முடியுமா?

மேலும் கூடங்குளம் அணுமின்னிலையம் 3 மற்றும் 4 விரைவில் கையெழுத்திடப்படுமா?

**வெளியுறவு செயலாளர்:** இது ஒரு நுட்பமான பிரச்சினை. நான் அதை பற்றி உண்மைகள் வருமுன் ,எந்த அறிவிப்புகள் செய்வதன் மூலம் துப்பாக்கியில் குதிக்க விரும்பவில்லை. எங்கள் முழு கவனத்தை அது ஈர்த்துள்ளது என்று நீங்கள் உறுதியாக நம்பலாம். குறிப்பாக நீங்கள் மேற்கோளிட்ட காரணிகள் பார்வையில் நாங்கள் அனைத்து கவனமும் செலுத்துகின்ராம்.நாம் மிக விரைவில் ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் ஒரு நிலையில் இருப்போம் என்று நான் நம்புகிறேன்.

**கேள்வி**: பிம்ஸ்டெக்கில் வங்காள பிரதமரை இந்திய பிரதமர் சந்திக்க சத்தியம் உள்ளதா குறித்து இருதரப்பிலான கேள்வி இது ஆகும்.அவர்கள் சந்திக்க நேர்ந்தால்,எந்தப் பகுதிகள் குறித்து விவாதிக்க சாத்தியம் உள்ளது?

**வெளியுறவு செயலாளர்**: நம் பிரதமர் வங்காள பிரதமரை சந்திப்பார் என்று உறுதிப்படுத்த முடியும். எப்போதும் போல் அவர்கள் சந்திக்கும் போது அவர்கள் உரையாடல் உண்மையில் சுமூகமான மற்றும் விரிவானதாக ஆகிறது,நான் கூறுகையில் அவர்கள் மிகவும் நட்பு

மற்றும் விரிவான தொட்டு பரஸ்பர நலன்களை கொண்டு அனைத்து பகுதிகளிலும் தொடர்பு கொள்வார்கள்.

**கேள்வி**: இத்தாலிய கடற்படை வழக்கு வந்த பின்னர் மேடம், இத்தாலியுடன் நம் உறவு விளிம்பில் இருக்கிறது. இப்பொழுது SUA குற்றச்சாட்டுக்கள் கைவிடப்பட்டது என்ர நிலையில், இப்போது எப்படி உறவு முன்னோக்கி செல்லும் என்று நினைக்கிறீர்கள்? இத்தாலி திருப்தி என்று நீங்கள் நினைக்கிறீர்களா அல்லது ள் இன்னும் செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நாங்கள் இத்தாலிய தூதுவர் அண்மையில் திரும்ப அழைக்கப்பட்டார் என்பதை பார்த்திருக்கிறேன். எப்படி நீங்கள் சிறந்த இந்த கட்டத்தில் உறவு விவரிக்க வேண்டும்?உங்களுக்கு சிறந்த வகையில் இந்த கட்டத்தில் உறவை எப்படி விவரிப்பீர்கள்?

**வெளியுறவு செயலாளர்**: கடற்படை பிரச்சினை இத்தாலியுடன் நம் உறவுகளை சிக்கலாக்கின என்று நினைக்கிறேன். எனினும், SUA கீழ் கடற்படை எதிரான குற்றச்சாட்டுக்கள் கைவிடப்பட்டது என்பது முன்னோக்கி போக ஒரு வழி மற்றும் ஒரு அறிகுறியாகும் மற்றும் நாம் விரைவில் நம் சொந்த சட்ட மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் படி இந்த விஷயத்தை தீர்க்க முயல்வோம்.

**அதிகாரபூர்வ பேச்சாளர்**: இங்கே இந்த பிற்பகல் இருந்ததற்கு மிகவும் நன்றி.

**(முற்றும்)**